## இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - 2016

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் காணப்படும் ரூபா 336,500 ஆன மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2000 சனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பிரிவு மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்திற்குரிய உத்தியோகத்தர்களால் செலுத்தப்பட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி, ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்குப் பதிலாக கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து ரூபா 879,809 தொகை மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் இவ்விடயம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 141,111,575 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 174,076,132 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 32,964,556 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. காப்புறுதி தவணை வருமானம் உட்பட செயற்பாட்டு வருமானம் ரூபா 31,958,052 ஆல் குறைவடைந்தமை மேற்குறித்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 145,304,938 ஆன மிகை தளம்பளுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 156,111,575 ஆக இருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றின் மீள் சீராக்கலின் போது கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது 18 சதவீத அதிகரிப்பொன்றும் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது 20 சதவீத அதிகரிப்பொன்று தென்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது அது 12 சதவீத வீழ்ச்சியொன்றாக மாறியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 4.1 செயலாற்றல்

-----------------------

1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

(அ) பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்பவர்களுக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் கிடைக்காமை அல்லது தாமதமடைதல் தொடர்பாக காப்புறுதி உரித்தொன்றை விநியோகித்தல் மற்றும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் அல்லது கப்பலில் ஏற்றியதன் பின்னர் தேவையான பணம் வழங்குவதை இலகுபடுத்தும் வகையில் நிதி நிறுவனங்களுக்கு பிணை வழங்குதல்.

(ஆ) இலங்கையரினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதிகளின் போது இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியே நிறைவேற்ற வேண்டிய சேவைகளுக்காக ஏற்றுமதியாளர்களுக்கு பிணை வழங்குதல், பணமாக உதவி வழங்குதல் மற்றும் நிதியிடல் நிறுவனங்கள் வழங்குகின்ற கடன் வசதிகளுக்காக மீள் நிதி வசதிகளை வழங்குதல்.

(இ) வெளிநாடுகளில் மேம்படுத்தல் நடவடிக்கையின் போது செலவிடுவதற்கு ஏற்படக்கூடிய நட்டங்கள் தொடர்பான பிணைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாடுகளில் சந்தை ஆராய்ச்சி நடவடிக்கைகளை கையேற்றல், பல்வேறு பிரிவுகள் தொடர்பாக மாநாடுகள் மற்றும் பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களை சேகரித்து விளம்பரம் செய்தல்.

(ஈ) காப்புறுதி மற்றும் பிணை வழங்கல், தேசிய நலனுக்காக தேவையானது என அரசாங்கத்தினால் கருதப்படுகின்ற பொறுப்புக்களை கையேற்றலும் நிறைவேற்றுதலும், ஏற்றுமதி பன்முகப்படுத்துதல், ஏற்றுமதியை விரிவுபடுத்தல் மற்றும் புதிய சந்தைகளை தேடுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு உதவுதல் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையானது என கூட்டுத்தாபனம் கருதக்கூடிய ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுதல்.

நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி உரிமை மற்றும் பிணைகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அனைத்து காப்புறுதி உரித்து வழங்கல் 2015 ஆம் ஆண்டின் போது 41 சதவீதத்திலிருந்து 68 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போது 53 சதவீதத்திலிருந்து 68 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு 29 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிறுவன இயலளவை அதிகரிப்பதற்கு உதவும் காப்புறுதி உரிமை மற்றும் பிணைகளுக்கான நட்டஈடு செலுத்துவதற்கான வழிகாட்டல்கள் உள்ளடங்கிய கைநூலைத் தயாரிக்கும் பணிகள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் வலுவூட்டும் பொருட்டு சர்வதேச தொடர்புகளை அதிகரிப்பதற்காக அதிகளவில் தேவைப்படும் செயற்பாடுகளாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ECGC-(Export Credit Guarantee Corporation) காப்புறுதி உரித்து வழங்கல் நடவடிக்கைகளுக்காக பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்கு சர்வதேச சமூகத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதென்பது மீளாய்வாண்டிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் போது 120 பேரிடமிருந்து மொத்த காப்புறுதி தவணைப்பண வருமானமான ரூபா 157,447,332 தொகை கிடைத்திருந்ததுடன், அதாவது 77 சதவீதம் 21 ஏற்றுமதியாளர்களிடமிருந்தே கிடைத்திருந்தன. மொத்த தவணை வருமானத்தில் ரூபா 35,205,311 அதாவது 22 சதவீதம் ஒரு ஏற்றுமதியாளரிடமிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஏற்றுமதியாளரிடமிருந்து கடந்த ஆண்டின் போது கிடைத்த 62,984,389 ஆன வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 27,779,078 ஆல் அதாவது 11 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதனால் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குதல் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்காக ஏற்றுமதியாளர்களை அறிவூட்டும் நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்துவதற்கும் முறைப்படுத்துவதும் காலத்தின் தேவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) சந்தைப்படுத்தல் பிரிவு மூலம் விநியோகிக்கப்பட்ட ஆண்டறிக்கைகளை அச்சிடுவதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மாத்திரம் ரூபா 75,000 வீதம் ரூபா 225,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட உள்நாட்டு வெளிநாட்டு தரப்பினருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இவ்வறிக்கை நாளதுவரையாக்கப்பட்ட தகவல் உள்ளடங்களாக பயன்படுத்துவோர் பயன் அடையக்கூடிய வகையில் காலரீதியாக விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டு வரை அவ்வாண்டுகளுக்குரிய அறிக்கைகள் அச்சிடப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து அதற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு பொருள் கொள்வனவாளர்களின் நிலைமை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தாமல் EURO 116,000 (ரூபா 17 மில்லியன் அளவில்) மூலதனத்தையும் இரண்டு ஊழியரைக் கொண்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியுடமை வியாபார நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிக்காக இரண்டு ஏற்றுமதியாளர்களுக்கு 2015 ஏப்ரல் 24 ஆந் திகதி மற்றும் யூன் 24 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் முறையே ரூபா 6 மில்லியன் மற்றும் ரூபா 6.5 மில்லயனாக ரூபா 12.5 மில்லியன் கடன் எல்லை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஒரு ஏற்றுமதியாளரின் முதலாவது ஏற்றுமதிக்கும் மற்றைய ஏற்றுமதியாளரினால் செய்யப்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது

ஏற்றுமதிக்குரிய வெளிநாட்டு கொள்வனவாளரால் பணக் கொடுப்பனவை தவிர்ப்புச் செய்ததன் பேரில் அந்த ஏற்றுமதியாளர்களுக்கு முறையே ரூபா 3,704,335 மற்றும் ரூபா 4,981,984 என ரூபா 8,686,319 தொகை இழப்பீடு செலுத்த நேர்ந்திருந்தது.

(ஆ) புதிய வியாபார நிறுவனமொன்றான தேசிய வியாபார நிறுவனமொன்றின் பொருள் கொள்வனவாளர் ஒருவின் மூலதனம் 1000 ஸ்ரேலிங் பவுண்கள் (ரூபா 200,000 அளவில்) ஆக இருந்ததுடன் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 04 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கொள்வனவாளர் தொடர்பான நிலைமை அறிக்கை தொடர்பில் போதியளவில் கவனம் செலுத்தாமல் ரூபா 15,000,000 ஆன கடன் எல்லை அதற்காக வழங்கப்பட்டிருந்தது. ஒரு ஏற்றுமதியாளரின் முதலாவது ஏற்றுமதிக்குரிய கொள்வனவாளரால் பணக் கொடுப்பனவை தவிர்ப்புச் செய்ததன் பேரில் ரூபா 9,504,000 தொகை இழப்பீடு செலுத்த கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்திருந்தது.

(இ) 1988 செப்தம்பர் 19 ஆந் திகதிய 7/88 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களின் முன்னேற்றத்தை நோக்கி காணப்பட்ட மருத்துவ நலன்முறைமை திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் இதுவரை அமைச்சரவை அங்கீகாரம் அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அம் மருத்துவ முறைமை எந்த திகதியிலிருந்து எந்த வகையான அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது தொடர்பான தகவல்கள் கேகாவையில் காணப்படவில்லை. இந்நலன் திட்டத்திற்காக கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களிடமிருந்து மாதச் சம்பளத்தில் ரூபா 30 முதல் ரூபா 80 வரை பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் நலன்புரி திட்டத்தின் கீழ் மருத்துவ பட்டியல் மீளளிப்பின் போது பரிந்துரை மற்றும் அங்கீகாரம் என்பன கூட்டுத்தாபனத்தின் மூன்று உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நலன்புரி முறைமையின் மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தின் 38 ஊழியர்களுக்காக ரூபா 2,650,729 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் தயாரிக்கப்படாமையினால் 15 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்துடன் தகைமையுள்ள உத்தியோகத்தர்களை வெற்றிடப் பதவிகளுக்காக பதவியுயர்வு வழங்கும் திட்டமொன்று காணப்படவில்லை.

(ஆ) பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) மற்றும் முகாமையாளர் (விற்பனை) ஆகிய 2 பதவிகளுக்காக முறையே பிரதி பொது முகாமையாளர் (தொழிற்பாடு) மற்றும் நிறைவேற்றுனர் (விற்பனை) ஆகிய நிரந்த பதவிகளை வகிக்கும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் வரையிலும் பதில் கடமை நியமனம் வழங்கி நிரந்தர பதவியில் பெற்றுக்கொள்ளும் சம்பளததிற்கு மேலதிகமாக பதில் கடமை படிகளாக 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 420,547 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 யூன் 06 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்ட இலக்கம் 08 இன் மூலம் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு 2014 மே 01 ஆந் திகதி முதல் சம்பளம் மீளமைக்கப்பட்டிருந்த போதிலும், 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்கம் மற்றும் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவன ரீதியான மீள் கட்டமைப்பினை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2006 நவம்பர் 10 ஆந் திகதிய 06/2006(ii) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2009 யூன் 01 ஆந் திகதிய 30(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் குறைந்த சம்பள படிநிலையை கவனத்தில் கொள்ளாது கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவி மற்றும் சமதரத்திலுள்ள பதவிகளுக்காக சம்பள அளவுத் திட்டம் தீர்மானிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 5. ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2012 பெப்ரவரி 10 ஆந் திகதி முதல் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தனியார் கணக்காய்வுக் கம்பனியொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், அக்கம்பனிக்கு மீளாய்வாண்டில் ரூபா 281,194 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே 27 சதவீதம் முதல் 152 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | ------------------------------------------------- | -------------------------- |
| (அ) | வெளிநாட்டு கொள்வனவாளர்களின் மதிப்பீட்டு நடைமுறைகள் | தர அறிக்கை மதிப்பீட்டின் போதும் கடன் எல்லையைத் தீர்மானிக்கும் போதும் போதியளவான கவனம் செலுத்தப்படாமை |
| (ஆ) | ஊழியர் முகாமைத்துவம் | ஊழியர்கள் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகள் முறையாக இன்மை |
| (இ) | செயற்பாட்டு கட்டுப்பாடு | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கினை அடையாமை. |